# மரணத்திற்கு பின்

ஜேம்ஸ் வான் ப்ராக்



*கேள்வி:
இறந்த பிறகு உடல்களை இங்கே விட்டுவிட்டு மேல் உலகங்களுக்குச் செல்லும்போது யாரை சந்திப்போம்?*

*பதில்:*
ஒவ்வொரு ஆன்மாவிற்கும் இது வேறுபட்டது! பொதுவாக எல்லோரும் தங்கள் பெற்றோர், தாத்தா, பாட்டி, உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அகால மரணம் அடைந்த அவர்களின் குழந்தைகளை சந்திப்பார்கள். அல்லது இப்பிறவியில் நல்லுறவு கொண்டவர்கள்கூட நம்மை கண்டு வாழ்த்து சொல்லலாம். ஆன்மாவின் வழிகாட்டிகளான உயர்ந்த ஆன்மாக்கள்கூட சில சமயங்களில் நம்முடன் இணைந்து எதிர்கால பிறப்பிற்குச் செல்வதற்கு முன், ஆன்ம உலகங்களில் ஏற்படும் பெரிய மாற்றத்தில் நம்மை வழிநடத்துகின்றன.
முக்கியமான நேரங்களில் முற்பிறவிகளுக்கு சம்பந்தப்பட்ட ஆன்மாக்கள்கூட நம்மை ஞாபகம் வைத்துக் கொண்டு, அந்த பிறவிகளின் அனுபவங்களை நமக்கு நினைவுபடுத்தலாம்!



*கேள்வி:
சில நேரங்களில் இறந்தவர்கள் நம் கனவில் தரிசனம் தருகிறார்கள். இது உண்மையா அல்லது நம் கற்பனையா?*

*பதில்:
* இறந்தவர் நம் கனவில் தோன்றி நம்முடன் தொடர்புகொள்ள விரும்புவது மிகவும் பொதுவானது! ஆழ்ந்த உறக்கத்தில் நமது பகுத்தறிவுள்ள மனம் நம் கட்டுப்பாட்டில் இருக்காது! அதனால்தான் நமக்கு வரும் கனவுகள்மீது எந்தவிதமான தீர்ப்புகளையும், விமர்சனங்களையும் செய்வதில்லை!
அங்குள்ள நமது ஆன்ம குடும்ப உறுப்பினர்களை சந்திக்க மாற்று வழிகள் மூலம் மற்ற தளங்களுக்குள் நுழைய முயற்சிக்கிறது. அந்த சந்திப்புகளை நம் மனம் கனவுகளாக விளக்குகிறது.




*கேள்வி:
எந்தெந்த வழிகளில் ஆன்மாக்கள் நம்முடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்கின்றன?*

*பதில்:
முயற்சியின்றி விளக்குகள் எரிவது மற்றும் அணைவது, தொலைபேசிகள் ஒலிப்பது, ரேடியோக்கள் மற்றும் தொலைக்காட்சிகள் தாமாக அணைவது மீண்டும் பாடுவது போன்ற நிகழ்வுகளின் மூலம் ஆன்மாக்கள் நம்முடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றன. சில சமயங்களில் நமக்கு மிக நெருக்கமானவர்கள் பயன்படுத்தும் நறுமண வாசனை திரவியங்களும் நம்மைச் சுற்றி பரவுகின்றன.



*கேள்வி:
ஆன்மா தன் உடலைவிட்டு நீங்கிவிட்டோம் என்பது ஆன்மாவுக்கு எப்போது தெரியும்?*

*பதில்:*
இந்த கேள்விக்கான பதில் பல காரணிகளைப் பொறுத்தது. தீராத நோய்களால் படுத்த படுக்கையாக இருப்பவர்கள், தங்கள் ஆற்றல் முழுவதையும் இழந்து மீண்டும் ஆற்றலை பெற நீண்ட காலம் எடுக்கும். அதனால் அவர்கள் பூமியை ஒட்டிக் கொண்டு மற்ற தளங்களை அடைய பல நூறு ஆண்டுகள் எடுத்துக் கொள்கின்றன!
திடீரென இறப்பவர்கள் உயிர் சக்தியால் நிறைந்திருப்பதால், முதலில் சற்றுக் குழப்பம் அடைந்தாலும் படிப்படியாக வேறு தளங்களுக்குச் சென்றுவிடுவார்கள். உயிருடன் இருக்கும்போதே மறுமை மற்றும் பிற உலகங்களைப் பற்றி அறிந்தவர்கள் பூமியில் தங்கள் பிறப்பு முடிந்து விட்டதை உணர்ந்து, இறந்ததும் விழிப்புணர்வுடன் உயர்ந்த உலகங்களுக்குச் சென்று விடுகின்றன!
அங்கு அவர்கள் ஒரு புதிய வாழ்க்கைக்கான திட்டங்களுடன் மகிழ்ச்சியுடன் திரும்புவார்கள். இத்தகவலை அறியாத அறிவிலிகள் தாங்கள் இறந்து விட்டதை நம்பாமல், இறந்த பின் வரும் புதிய வாழ்வில் எளிதில் நுழைய முடியாமல் நரகத்தைத் தாங்களே உருவாக்கிக் கொள்கிறார்கள்!



கேள்வி:
இறந்தவர்கள் நம்முடன் இல்லாததை நாம் தெரிந்து கொள்வது போல் அவர்களும் இதை தெரிந்து கொள்வார்களா?*

*பதில்:*
நிச்சயமாக தெரிந்து கொள்வார்கள்! இறந்து பிற லோகங்களுக்குச் சென்ற ஆன்மாக்களுக்கு 'மரணமே இல்லை' என்ற உண்மை போதிக்கப்படுவதால் அவர்கள் மரண பயத்திலிருந்து விடுபடுகிறார்கள்!
ஆன்மா இறக்காததால் "தம்மைப்பற்றி கவலைப்பட வேண்டாம்" என்று பூமியில் வாழும் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு விளக்க அவர்கள் மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறார்கள்! தாங்கள் உயிருடன் இருப்பதைச் சொல்ல கனவுகளைக்கூட கொடுக்கிறார்கள்!



*கேள்வி:
இறந்த குழந்தைகளின் ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்ள முடியுமா?*

*பதில்:*
சொல்ல முடியாது. ஆன்மா ஏற்கெனவே உடலை விட்டு வெளியேறி விட்டால் தொடர்பு கொள்ள முடியாது!

*கேள்வி:
இறந்த நமது அன்புக்குரியவர்கள் எங்கு மறுபிறவி எடுத்தார்கள் என்பதை நாம் எப்படி அறிவது?*

*பதில்:
* நமது ஆன்மாவை சூழ்ந்திருக்கும் பல உடல்களில் பௌதிக உடலும் ஒன்று. அதனால் ஆன்ம வடிவங்களான நாம் வெறும் பௌதீக உடலுக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டவர்கள் அல்ல!
பன்முகத் தளங்களுக்குச் சொந்தமான நமது ஆன்மா ஒரே நேரத்தில் பௌதீக உடலுடன், பௌதீக தளத்தில் இருந்தபடியே மற்ற சரீரங்களில் மற்ற தளங்களில் இருக்கும். அதனால்தான் நமது ஆன்மாவின் குறைந்தபட்ச பகுதி பௌதீக தளத்தில் வாழ்க்கையை அனுபவிக்கிறது. அதிகபட்ச பகுதி வெவ்வேறு தளங்களில் அனுபவித்துக் கொண்டிருக்கும்.
வெவ்வேறு உலகங்களிலும், இந்த பூமியிலும் மறுபிறவி எடுத்திருக்கும் நம் ஆன்மா அன்பானவர்களை சந்திக்கும். இதை உணர்ந்துகொள்ள நிறைய தியானம் வேண்டும்.



*கேள்வி :
உண்மையில் ஆன்மா எப்போது மறுபிறவி எடுக்க விரும்புகிறது?*

*பதில் :
என் ஆன்மாவின் வளர்ச்சிக்கான நேரம் வந்துவிட்டது. சூழ்நிலைகள் சரியாக இருக்கிறது" என்று ஒரு ஆன்மா நினைக்கும்போது அது பிறக்க முடிவு செய்கிறது. ஆனால், அது ஆன்மாவின் சுய விருப்பத்தை மட்டுமே சார்ந்துள்ளது!

*கேள்வி :
இங்கிருந்து மற்ற உலகங்களுக்குச் சென்ற ஆன்மாக்கள் ஏன் அந்த உலகங்களில் பெரிய பெரிய அதிசயங்களைப் பற்றி அல்லது அற்ப விஷயங்களைப் பற்றி சொல்வதில்லை?*

*பதில்:*
காலமற்ற ஆன்மாக்கள் எப்பொழுதும் நம்முடன் தொடர்புகொள்ள முயல்கின்றன. அந்த குறுகிய உரையாடல்களில் அது என்ன என்பதை நம் புரிதல் நிலையைப் பொறுத்து நாம் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு சொல்கிறார்கள்.
அவர்கள் இருக்கும் உயர்ந்த தளங்கள் மற்றும் ஆன்ம உலகங்களைப் பற்றிய விஷயங்களைச் சொன்னால், நாம் அவற்றின் ஆதாரங்களை தேட ஆரம்பிக்கிறோம்!
அதனால்தான் முதலில் சிறுசிறு சிந்தனைகள் மூலம் அவர்கள் நம்முடன் தொடர்பு கொள்கிறார்கள். அதன்பிறகு நமது உணர்வு நிலை அதிகரிக்கும் போது உயர்ந்த உலக அதிசயங்கள் பற்றிய தகவல்களை தொடர்ந்து நமக்குத் தருகிறார்கள் இதைத்தான் இயல்பான 'விழிப்புணர்வு' என்கிறோம்!

/ முற்றும் /